1971 டிசம்பர் 15]

(இ) ஆம். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்பாடு செய்த கண்டனக் கூட்டம் ஒன்று 2—9—1971-ல் நடைபெற்றது. ஆனால். கூட்ட நாளன்றோ அதன் பின்னரோ பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்கு முறையீடு ஏதும் வந்து சேரவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. டி. கே தங்கமணி : இம்மாதிரியாக வெளியேற்றப் படக்கூடிய நேரத்திலே சில குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்த வர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை மட்டும் வெளியேற்றுகின்ற நிலைமை இருக்கின்றதே அம்மாதிரி வராத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த இடம் சிலபல ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கிரமிக்கப்பட்டு முறைப்படி அவர்கள்—அந்த இடம் கழிவிடத்திற்காக ஒதுக்கப் படவேண்டுமென்ற காரணத்தினால்—வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் மறுபடியும் அங்கே ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அவர்களை அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. திருப்பத்தூர் தாசில்தார் முன்னிலையிலும், சிங்கம்புணரி காவல் துறை அதிகாரி முன்னிலையிலும் அகற்றப்பட்டார்கள். அவர் களிடத்திலே ஒரே சமாதான உடன்படிக்கையின் மூலமாக வேறு இடம் பார்த்துக்கொள்ளலாம், இந்த இடம் அவசியமாகத் தேவைப்படுகிறது என்று சமாதான முடிவு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

சீருடைப்படையினரின் பணிகள்

* 406 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஆகஸ்டு திங்கள் 10-ஆம் நாளன்று சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து ஆய்வுப் பணிக்கு சீருடைப் படையினரின் உதவி கேட்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இல்லை.

* 407 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சென்னை நகரில் சீருடைப் படையினர் மூலம், பஸ் பயணிகள் நிற்பதற்கான நிழற்குடைகள் தற்போது எத்தனை கட்டப்பட்டுள்ளன ?

(இ) அவற்றிற்கு ஆன செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 48 நிழற் குடை களுக்கு ஏற்பாடு செய்து 28 அமைக்கப்பட்டு விட்டன.

(இ) 28 நிழற்கொடைகளுக்கு ஆன செலவு ரூ. 35,500.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சிரணியின் மூலம் இத்தகைய நிழற்குடைகள் அமைக்கப்படுவதால் மிக உறுதியாகவும் சிக்கனமாகவும் அவை காணப்படுவதால் ஏனைய நகரங்களிலும் இத்தகைய நிழற்குடைகள் சிரணியினர் மூலம் அமைத்துத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, இந்த 48 நிழற்குடைகளும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிறந்தநாளையொட்டி அமைக்கப்பட்டன. இதற்கான செலவு அரசாங்கப் பணமல்ல, தனிப்பட்டவர்கள் கொடுத்த நன்கொடைகள் மூலமாக அமைக்கப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் இதே போன்று மற்ற நகரங்களுக்கும் அமைப்பது என்பதுதான். அப்படியென்றால் நன்கொடைகள் மூலம் அமைக்க அவர்களும் துணை நின்றால் அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வரும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வருகின்ற 49-வது பிறந்த நாளையொட்டி மாயூரம் நகரில் தனியார்கள் நன்கொடைகள் மூலம் நிழற்குடைகள் அமைக்க முன்வரும்பொழுது அதற்கு அரசு உதவி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இதை மிக மகிழ்ச்சியோடு வரவேற்று அதற்கு ஆவன செய்யலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரசாங்க வேலைகள் சிலவற்றை சிரணியின்மூலமாகச் செய்வதால் அரசாங்கம் தனியாகச் செய்வதால் ஆகின்ற செலவினைவிட அதிகமாகச் செலவாகின்றது என்று சொல்லப்படுகிறதே, அப்படியானால் தனியாகவே அரசாங்கமே செய்யலாமே, அப்படிச் செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் அவர்கள் நடைமுறையில் இருப்பதற்கு நேர்மாறாகச் சொல்கிறார்கள். அரசாங்கம் செய்வதைவிட சிரணி மூலமாக மேற்கொள்ளப்படும் வேலைகளுக்குச் செலவு குறைகிறது என்று திட்டவட்டமாகப் பலமுறை எடுத்துக் கூறப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு நான் மீண்டும் கொண்டு வருகிறேன்.

Strike in power-loom unit at Madurai

* 408.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether 1000 workers in Power-loom factories in Madurai went on strike for wage increase from 4th September 1971; and

(*b*) if so, whether any settlement has been reached?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.